தின கனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com


RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 102 | 4 Pages | 10.11.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 102 | 4 பக்கங்கள் | 10.11.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா**
**செய்யாமை மாசற்றார் கோள்**

**விளக்கம்:**
சிறப்பைத்தருகின்ற பெருஞ் செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும், பிறர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவரின் கொள்கையாம்.

# மாணவர்களின் கற்றல் சூழலை மேம்படுத்தும் பல்வேறு திட்டங்கள் முதலமைச்சருக்கு அன்பில் மகேஷ் நன்றி

சென்னை, நவ.10

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில், 29 மாவட்டங்களில், 141 அரசுப் பள்ளிகளில் 171.16 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 754 புதிய வகுப்பறைக் கட்டடங்கள், 17 ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் கீழ் கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா மற்றும் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவிஷ்ய வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கான கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.



மேலும், கருணை அடிப்படையில் 49 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிலையில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தனது எக்ஸ் தள பதிவில்,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பள்ளிக்கல்வித் துறை சார்பில், 29 மாவட்டங்களில், 141 அரசுப் பள்ளிகளில் 171.16 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 754 புதிய வகுப்பறைக் கட்டடங்கள், 17 ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கான கட்டடங்களையும் திறந்து வைத்தார்.

மாணவர்களுக்கான கற்றல் சூழலை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றிகள் என்று தெரிவித்துள்ளார்.

## சிட்னி விமான நிலையத்தில் விமான என்ஜின் வெடித்ததில் தீ விபத்து



சிட்னி, நவ.9

சிட்னி விமான நிலையத்தில் இருந்து பிரின்பேனுக்கு குவாண்டாஸ் நிறுவனத்தின் விமானம் ஒன்று இன்று மதியம் 1 மணிக்கு (அந்நாட்டு நேரப்படி) புறப்பட்டது. புறப்பட்ட சில மணிநேரத்தில் விமானத்தின் வலது என்ஜின் வெடித்ததால் தீ பற்றியது. இதனால் விமானம் 3வது ஓடுபாதையில் அவசரமாக தரையிறக்கப்பட்டது. இதையடுத்து அங்கு வந்த தீயணைப்புத்துறையினர் மற்றும் போலீசார் தீயை அணைத்தனர்.


இந்த விமானத்தில் பயணித்த 174 பயணிகளும் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக அந்நாட்டு தனியார் செய்தித்தாள் தெரிவித்துள்ளது. இந்த தீ விபத்தால் விமான நிலைய பகுதி முழுவதும் புகைமூட்டமாக காணப்பட்ட புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

விமான பயணி ஜார்ஜினா லூயிஸ் கூறுகையில், "விமானம் புறப்பட்ட 10 நிமிடங்களுக்கு பிறகு விமானத்தில் பலத்த சத்தம் கேட்டது. பிறகு வலதுப்புற என்ஜினில் சிக்கல் ஏற்பட்டதாக விமானி விளக்கினார். இதையடுத்து விமானம் பத்திரமாக தரையிறக்கப்பட்டது" என்றார்.

## உலக வல்லரசு நாடுகளின் பட்டியலில் இந்தியா சேர்க்கப்பட வேண்டும் ரஷிய அதிபர் புதின்

மாஸ்கோ, நவ.9

ரஷியாவில் உள்ள சோச்சி நகரத்தில் நடைபெற்ற வால்டாய் பேச்சுவார்த்தை கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய ரஷிய அதிபர் புதின், உலகஅளவில்பொருளாதாரவளர்ச்சியில் இந்தியா முன்னணியில் உள்ளது என்று தெரிவித்தார். மேலும் இது தொடர்பாக அவர் பேசியதாவது;



"ரஷியா அனைத்து வழிகளிலும் இந்தியாவுடன் உறவுகளை வளர்த்து வருகிறது. இரு நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகளில் அதிக நம்பிக்கை உள்ளது. அதிவேக பொருளாதார வளர்ச்சி, பண்டைய கலாச்சாரம், வளர்ச்சிக்கான நல்ல வாய்ப்புகள் மற்றும் ஒன்றரை பில்லியன் மக்கள் தொகையை கொண்ட இந்தியா, வல்லரசு நாடுகளின் பட்டியலில் சந்தேகத்திற்கு இடமின்றி சேர்க்கப்பட வேண்டும்.

இந்தியா ஒரு சிறந்த நாடு. உலக அளவில் பொருளாதார வளர்ச்சியில் இந்தியா முன்னணியில் உள்ளது. இந்தியாரஷியா இடையிலான ஒத்துழைப்பு ஒவ்வொரு ஆண்டும் பல மடங்கு அதிகரித்து வருகிறது. நாங்கள் எங்கள் ஆயுதங்களை இந்தியாவுக்கு விற்பனை மட்டும் செய்யவில்லை, நாங்கள் அவற்றை ஒன்றாக வடிவமைக்கிறோம்.

இந்திய ஆயுதப் படைகளிடம் எத்தனை வகையான ரஷிய ராணுவ உபகரணங்கள் பயன்பாட்டில் இருக்கிறது உள்ளன என்பதைப் பாருங்கள். இந்த உறவில் ஒரு பெரிய அளவிலான நம்பிக்கை இருக்கிறது. நாங்கள் 'பிரம்மோஸ்' ஏவுகணையை காற்று, கடல் மற்றும் நிலம் ஆகிய மூன்று சூழல்களில்பயன்படுத்துவதற்குஏற்றதாகஉருவாக்கினோம்.இந்தியாவின் பாதுகாப்புக்காக இது போன்ற திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்தியாவிற்கும்,சீனாவிற்கும்இடையிலானஎல்லையில்சிலசிக்கல்கள் உள்ளன. புத்திசாலியான, திறமையான தலைவர்கள் தங்கள் நாட்டு மக்களின் எதிர்காலத்தை மனதில் வைத்து, சமரசமான முடிவுகளை தேடுவார்கள், இறுதியில் அதை கண்டுபிடிப்பார்கள்."

இவ்வாறு புதின் தெரிவித்துள்ளார்.

## மேற்கு சிலியில் நிலநடுக்கம்: ரிக்டர் அளவில் 5.0 ஆக பதிவு




பீஜிங், நவ.9

மேற்கு சிலியில் இன்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை 8.23 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.0 ஆக பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

10.0 கிமீ ஆழம் கொண்ட இந்த நிலநடுக்கம், 41.45 டிகிரி தெற்கு அட்சரேகையிலும், 84.63 டிகிரி மேற்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் உயிரிழப்புகள் குறித்த எந்த தகவலும் வெளியாகவில்லை.

## திருப்பூரில் அதிநவீன துப்பாக்கியுடன் சுற்றி திரிந்த வாலிபர் கைது



திருப்பூர், நவ.10

திருப்பூர் மாநகரம் எஸ்.ஆர். நகர் பின்புறம் உள்ள தனியார் கார்டன் பகுதியில் நேற்று மாலை நவீன துப்பாக்கியுடன் இருசக்கர வாகனங்களில் வந்த 3 பேர் மரத்தில் அமர்ந்திருந்த பறவையை சுட்டு வேட்டையாடினர். இதனை கண்ட அப்பகுதி பொதுமக்கள் அவர்களிடம் கேட்டபோது அவர்கள் முறையான பதில் எதுவும் தெரிவிக்காமல் துப்பாக்கியுடன் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.


அப்போது அங்கிருந்த நபர்கள் அவர்களை செல்போனில் வீடியோவாக பதிவு செய்தனர். அதில் 3 பேரும் வேட்டையாட வந்திருப்பதும், உயர்மட்ட கட்டிடங்கள் மற்றும் காலியான நிலப்பரப்பு உள்ள இந்த பகுதியில் ஏராளமான பறவைகள் இரை தேடி வந்து செல்லும் நிலையில் அவர்கள் எஸ்.ஆர். நகர் பகுதியை தேர்ந்தெடுத்து வந்து வேட்டையாடி இருப்பது தெரியவந்தது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு தீபாவளி சமயத்தில் இதே போல இவர்கள் அந்த பகுதியில் 10க்கும் மேற்பட்ட பறவைகளை சுட்டு வேட்டையாடி இருப்பதும் தெரியவந்தது. மேலும் அவர்கள் வைத்திருந்த துப்பாக்கி ஏர்கன் வகையை சேர்ந்ததா? அல்லது லைசன்ஸ் பெற்ற துப்பாக்கியா? என எதுவும் தெரியாத நிலையில் ஸ்கோப் வைக்கப்பட்ட நீண்ட தூர இலக்குகளை குறிவைக்கும் துப்பாக்கி வைத்திருந்ததால் பொதுமக்கள் அச்சமடைந்தனர்.

இதையடுத்து திருப்பூர் மத்திய போலீசார் துப்பாக்கியுடன் சுற்றி திரிந்த 3பேரில் ஒருவரை பிடித்து விசாரித்தனர். விசாரணையில் அவர் திருப்பூர் கரும்பாளையம் பகுதியை சேர்ந்த கருப்பசாமி (வயது 39) என்பது தெரியவந்தது. அவரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருப்பூர் மாநகர போலீஸ் கமிஷனர் லட்சுமி கூறுகையில், கருப்பசாமி வைத்திருந்த ஏர் கன் துப்பாக்கிக்கு லைசென்ஸ் பெற தேவையில்லை. இருந்த போதிலும் அவர் பறவைகளை வேட்டையாடியதாலும், பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் சுற்றி திரிந்ததால் அவர் மீது வழக்குப்பதிவு செய்து கைது செய்யப்பட்டுள்ளார் என்றார்.

## பாம்பு கடியை அறிவிக்கக்கூடிய (Notifiable Disease) நோயாக அறிவித்த தமிழக அரசு




சென்னை, நவ.10

பாம்பு,தேள்,நாய்மற்றும்பிறவிலங்குகள்கடிக்குசிகிச்சைக்காக, ஆரம்ப சுகாதார நிலையம் உட்பட அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் 24 மணி நேர சிகிச்சையை அரசு வழங்கி வருகிறது. மேலும் விஷக்கடியால் ஏற்படும் உயிரிழப்புகளை தடுக்க தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்த நிலையில், பாம்பு கடியை அறிவிக்கக்கூடிய நோயாக (Notifiable Disease) தமிழக அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம் அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் பாம்பு கடி தொடர்பான சிகிச்சை விவரங்களை தமிழக அரசுக்கு தெரிவிக்க வேண்டும்.

பாம்பு கடி தொடர்பான தரவுகளை ஆராய்ந்து பாம்பு கடிக்கு சிகிச்சை அளிப்பதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை இதன் மூலம் மேம்படுத்த முடியும் என்று கூறப்படுகிறது.




மதுரைமாவட்டம்கலெக்டர்அலுவலகத்தின்முன்புபட்டியல்இனமக்கள்அரசுபதவியில் இருந்தும் பதவி இறக்கம் செய்கிறார்கள் மற்றும் பட்டியலின மக்களை பணியில் மற்றும் அமர்த் தும்திட்டம் இருந்தாலும் கிடப்பில் போட்டு விடுகின்றனர் இதை கண்டித்து அறிவு சமூகம் என்ற அமைப்பும் புரட்சி பாரதம் கட்சியின் மாநில துணைச் செயலாளர் முருகேசன் அவர்களும் கிழக்கு ஒன்றிய செயலாளர் பரமசிவம் அவர்களும் கலந்து கொண்டனர்



நாகர்கோவில் ஸ்ரீ முருகப்பெருமான் கோவில்களில் நடைபெறும் திருக்கல்யாண விழாவைமுன்னிட்டு,நாகர்கோவில்கோட்டாறுமற்றும்பீச்ரோடுபகுதிகளில்ஏழைகளுக்கு வேஷ்டி மற்றும் சேலைகளை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த விழாவில், தமிழக காங்கிரஸ் விவசாய பிரிவு மாநில பொதுச் செயலாளர் ஆர். எஸ். ராஜன் கலந்து கொண்டு, ஏழை மக்கள் பயனடையும் வகையில் வேஷ்டி மற்றும் சேலைகளை வழங்கினார்.

# மயிலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை

மயிலம், நவ.10

விழுப்புரம் மாவட்டம் மயிலத்தில் சார்பதிவாளர் அலுவலகம் இயங்கி வருகிறது.

இங்கு மயிலம் மற்றும் அதன் சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த பொது மக்கள், பத்திரப்பதிவு செய்ய வருவார்கள்.

இந்த அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் அங்குள்ள அதிகாரிகள், பத்திரப்பதிவுக்கு அரசு நிர்ணயித்த கட்டணத்தை விட கூடுதலாக பணம் வாங்குவதாக புகார் எழுந்தது. இது குறித்து விழுப்புரம் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நேற்று மாலை 6 மணியளவில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸ் துணை சூப்பிரண்டு அழகேசன் தலைமையில் இன்ஸ்பெக்டர் ஈஸ்வரி, சப் இன்ஸ்பெக்டர் சக்கரபாணி மற்றும் போலீசார், மயிலம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றனர்.

அப்போது அங்கு சார்பதிவாளர் மற்றும் அலுவலக ஊழியர்கள், இவர்களை தவிர இடைத்தரகர்களும் மற்றும் பத்திரப்பதிவு செய்ய வந்த பொதுமக்கள் சிலரும் இருந்தனர். உடனே அவர்கள் யாரும் அலுவலகத்தில் இருந்து வெளியே செல்லாதவாறு கதவுகளை உள்புறமாக தாழிட்டுக் கொண்டு லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனையை தொடங்கினர்.

அலுவலகத்தில் உள்ள ஒவ்வொரு அறையாகவும் மற்றும் அங்குள்ள பீரோக்களை திறந்து பார்த்தும் போலீசார் தீவிர சோதனை மேற்கொண்டனர். அது மட்டுமின்றி காலையில் இருந்து மாலை வரை யார், யார் பத்திரப்பதிவு செய்ய வந்துள்ளனர். எத்தனை பேர் வந்தனர், அவர்களில் எவ்வளவு பேருக்கு பத்திரப்பதிவு நடந்துள்ளது என்பது குறித்த விவரங்களை சேகரித்து அலுவலகத்தில் இருந்த முக்கிய ஆவணங்களை கைப்பற்றி விசாரணை நடத்தினர்.

சுமார் 4 மணி நேரமாக நடந்த இந்த சோதனையின் போது அலுவலகத்தில் ரூ.1 லட்சத்து 30 ஆயிரம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த பணத்துக்கு அதிகாரிகள் உரிய கணக்கு காண்பிக்காததால் கணக்கில் வராத அந்த பணத்தை போலீசார் கைப்பற்றினர். அவற்றுடன் சோதனையை முடித்துக்கொண்டு வெளியே வந்த லஞ்ச ஒழிப்பு போலீசார், முக்கிய ஆவணங்களையும் கைப்பற்றி லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு எடுத்துச்சென்றனர்.

கணக்கில் வராத ரூ.1.30 லட்சம் பணம் பறிமுதல் செய்யப்பட்டது தொடர்பாக சார் பதிவாளர் வெங்கடேஸ்வரி, அலுவலக ஊழியர்கள் கணேசன், வீர. அப்துல்லா, பாலசுப்பிரமணியன், டிரைவர் சரவணன், புரோக்கர் செல்வம் உள்ளிட்ட 6 பேர்மீது லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

மயிலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை நடத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அமரன் படத்திற்கு தடை விதிக்கக் கோரி எஸ்.டி.பி.ஐ. சார்பில் போராட்டம்

சென்னை, நவ.10

நடிகர் சிவகார்த்திகேயன் மற்றும் இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி கூட்டணியில் உருவாகி வெளியான திரைப்படம் "அமரன்." தீபாவளி பண்டிகையன்று வெளியான அமரன் திரைப்படம் மாபெரும் வெற்றி பெற்று, வசூலையும் வாரி குவிக்கிறது.

இந்தப் படத்திற்கு ரசிகர்கள், பொது மக்கள் மட்டுமின்றி திரைப் பிரபலங்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் பலர் பாராட்டு தெரிவித்தனர்.



இந்த நிலையில், அமரன் படத்திற்கு தடை விதிக்கக் கோரி கோயம்புத்தூரில் எஸ்.டி.பி.ஐ. சார்பில் போராட்டம் நடத்தப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

அமரன் திரைப்படம் சிறுபான்மையினரை தவறாக சித்தரித்து இருப்பதாக கூறி எஸ்.டி.பி.ஐ. சார்பில் போராட்டம் நடத்தப்பட்டது. திரையரங்கம் முன்பு போராட்டம் நடத்தப்பட்ட நிலையில், போலீசார் தடுப்பு வேலிகள் அமைத்து போராட்டக்காரர்களை தடுத்து நிறுத்தினர்.

போராட்டக்காரர்கள் தடுத்து நிறுத்தப்பட்ட நிலையில், போலீசார் மற்றும் எஸ்.டி.பி.ஐ. கட்சியினர் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அமரன் படத்தை தடை செய்யக்கோரி போராட்டம் நடத்தப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

# மதுவில் விஷம் கலந்து கொடுத்து நண்பரை கொன்ற ராணுவ வீரர் கைது

திருமங்கலம், நவ.10

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே உள்ள சாத்தங்குடி பகுதியை சேர்ந்தவர் ராஜபாண்டி (வயது 27). அதே பகுதியை சேர்ந்தவர் மருதுபாண்டி (27). இருவரும் நண்பர்கள்.

ராணுவத்தில் வேலை பார்த்து வந்த மருதுபாண்டி ஊருக்கு வரும் போது ராஜபாண்டியுடன் வெளியே செல்வது வழக்கம். மேலும் 2 பேரும் சேர்ந்து அடிக்கடி மதுகுடித்து வந்தனர். கடந்த 2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ந்தேதி புலியூர் பகுதியில் ராஜபாண்டி உடல் அழுகிய நிலையில் பிணமாக கிடந்தார்.

இதுகுறித்துதகவலறிந்த திருமங்கலம் தாலுகா போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் போலீசார் வழக்குப்பதிவு செய்துதற்கொலை செய்து கொண்டாரா? என்ற கோணத்தில் விசாரணை நடத்தினர்.

இந்த நிலையில் பிரேத பரிசோதனை அறிக்கையில் மதுவில் விஷம் கலந்து குடித்தது தெரியவந்தது. இதுகுறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். அப்போது அவரது நண்பர் மருது பாண்டியின் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டது. உடனே போலீசார் அவரிடம் தீவிர விசாரணை நடத்தியதில் முன்விரோதம் காரணமாக ராஜபாண்டிக்கு மதுவில் விஷம் கலந்து மருதுபாண்டி கொடுத்தது தெரியவந்தது.

இதையடுத்து போலீசார் ராணுவத்தில் பணியாற்றிய மருதுபாண்டியை ஓராண்டுக்கு பின் கைது செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

# டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி உயிரிழப்புகளை தடுக்க அரசு விழிப்புடன் செயல்பட வேண்டும் டிடிவி தினகரன்

சென்னை, நவ.10

அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பாதிப்பால் இதுவரை 8 பேர் உயிரிழந்திருப்பாக நாளிதழ்களில் வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த அதிர்ச்சியளிக்கின்றன.

தமிழகத்தில் டெங்கு காய்ச்சலுடன் பருவகால தொற்றுநோய்களும் தீவிரமடைந்து பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், அதனை தடுக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்காத சுகாதாரத்துறையின் அலட்சியப்போக்கு கடும் கண்டனத்திற்குரியது.



காய்ச்சல், சளி, தலைவலி, உடல் சோர்வு, வாந்தி, மயக்கம் போன்ற டெங்கு காய்ச்சலுக்கான அறிகுறிகளோடு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொடங்கி அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் இருப்பதை சுகாதாரத்துறை உறுதி செய்ய வேண்டும். அடுத்த சில மாதங்களுக்கு டெங்கு காய்ச்சலின் தாக்கம் அதிகரிக்கும் என கூறப்படும் நிலையில், தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் டெங்கு காய்ச்சலுக்கான அறிகுறிகள் குறித்தும், அதற்காக மேற்கொள்ள வேண்டிய சிகிச்சை முறைகள் குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய அவசியமும் தற்போது ஏற்பட்டுள்ளது.

எனவே, இனியாவது விளம்பர அரசியலை தவிர்த்து, மக்களை பெருமளவு பாதிக்கும் டெங்கு காய்ச்சலை தடுக்கும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி உயிரிழப்புகளை தடுப்பதோடு, பொதுமக்களுக்கு டெங்கு காய்ச்சல் பாதிப்பு தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்த முன்வர வேண்டும் என சுகாதாரத்துறையையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தமிழக அரசின் டாக்டர் அம்பேத்கர் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

சென்னை, நவ.10

தமிழ்நாட்டில் பட்டியல் இன மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக பலர் அரிய தொண்டாற்றி வருகிறார்கள். பட்டியல் இன மக்களின் முன்னேற்றத்திற்காக தங்களை இணைத்துக் கொண்டு அவர்கள் ஆற்றி வரும் அரிய தொண்டுகளை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு ஆண்டுதோறும் டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கி தமிழ்நாடு அரசு சிறப்பித்து வருகிறது.




அவ்வகையில் 2024 ஆம் ஆண்டு டாக்டர் அம்பேத்கர் விருது பெற விரும்புவோர் தங்களைப் பற்றிய முழுவிவரங்களுடன் விண்ணப்பிக்கலாம். www.tn.gov.in/ta/forms/Deptname/1 என்ற இணையதளத்திலிருந்து இவ்விருதுக்கான விண்ணப்பப்படிவத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஆதிதிராவிடர் நல இயக்குநர் அலுவலகம். சென்னை05 அல்லது சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திலும் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

# திருமண நாளில் நேர்ந்த துயரம்: மின்சாரம் தாக்கி பெண் பலி

திருவோணம், நவ.11

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் அருகே உள்ள ஊரணிபுரம் பட்டுவிடுதி கிராமத்தைச் சேர்ந்தவர் லட்சுமணன், விவசாய கூலி தொழிலாளி.

இவரது மனைவி தங்கமணி (43), இவர்களுக்கு திருமண நாளான நேற்று கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்து விட்டு பிறகு வீட்டுக்கு வந்துள்ளனர். இவர் துணிகளை துவைத்து காய போடுவதற்காக வீட்டில் உள்ள இரும்பு கம்பியில் கொடி கட்டியிருந்தனர். அதன் அருகே மற்றொரு சிறிய கம்பியை கட்டி வைக்கப்பட்டிருந்தது. இந்த கொடி கம்பியில் நேற்று தங்கமணி துணி காய போட்டுள்ளார்.

பின்னர் அவர் துணிகளை எடுக்க சென்ற போது வீட்டில் உள்ள இரும்பு கம்பியின் மூலம் மின்கசிவு ஏற்பட்டு கொடி கம்பியில் பாய்ந்து தங்கமணியை மின்சாரம் தாக்கியது.

இதில் மூக்கில் ரத்தத்துடன் சுருண்டு விழுந்து தங்கமணி உயிருக்கு போராடினார். உடனே அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு பட்டுக்கோட்டையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் தங்கமணி ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினர்.

இது குறித்து தகவல் அறிந்த திருவோணம் போலீசார் தங்கமணி உடலை கைப்பற்றி பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இது சம்பந்தமாக திருவோணம் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் விஷ்ணுபிரசாத் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மின்சாரம் தாக்கி இறந்த தங்கமணிக்கு 2 பெண் குழந்தைகளும், ஒரு ஆண் குழந்தைகளும் உள்ளனர் திருவோணம் அருகே திருமண நாளில் மின்சாரம் தாக்கி பெண் பலியான சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# தேங்கும் மழைநீரை உடனுக்குடன் அப்புறப்படுத்த நடவடிக்கை மேயர் பிரியா

சென்னை, நவ.11

சென்னையில் அடுத்து வரும் சில நாட்கள் கன மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதையடுத்து சென்னை நகரில் வெள்ளம் தேங்காமல் தடுக்கும் நடவடிக்கைகளை சென்னை மாநகராட்சி தொடங்கியுள்ளது.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி மேயர் பிரியா இன்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:



சென்னையில் சமீபத்தில் 2 நாட்கள் பெய்த மழையால் சில பகுதிகளில் தண்ணீர் தேங்கியது கண்டறியப்பட்டு உள்ளது.

சென்னையில் 24 மணி நேரத்திற்கும் மேலாக மழைநீர் தேங்கும் பகுதிகள் கண்டறியப்பட்டு இனிவரும் நாட்களில் தண்ணீரை விரைந்து அகற்ற முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. சென்னையில் ஒரு சில பகுதிகளில் மோட்டார்கள் மூலம் மழைநீரை அப்புறப்படுத்த வேண்டிய நிலை உள்ளது. அங்கு மோட்டார்கள் அமைத்து மழைநீர் உடனடியாக வெளியேற்றப்படும். இதற்காக மாநகராட்சி தயார் நிலையில் இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# குரூப்2 காலி பணியிடங்கள் அதிகரிப்பு: டி.என்.பி.எஸ்.சி. அறிவிப்பு

சென்னை, நவ.11

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி.) மூலமாக குரூப்2, 2ஏ பதவிகளுக்கு 2327 பேரை தேர்வு செய்வதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு அதற்கான முதல் நிலை தேர்வு கடந்த செப்டம்பர் மாதம் 14ந்தேதி நடைபெற்றது. இதில் நேர்முக தேர்வு அடங்கிய 507 பணியிடங்களும், நேர்முக தேர்வு அல்லாத 1820 பணியிடங்களும் அடங்கும்.

இந்த தேர்வை 5 லட்சத்து 81 ஆயிரம் பேர் எழுதியுள்ளனர். இதில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு முதன்மை தேர்வு நடத்தப்பட்டு அரசுப் பணிக்கு தேர்வு செய்யப்படுவார்கள்.




இந்த தேர்வு முடிவுகள் அடுத்த மாதம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த முடிவை எதிர்பார்த்து லட்சக்கணக்கானோர் காத்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் குரூப்2, 2 ஏ பணியிடங்களுக்கு 2327 பேரை தேர்வு செய்வதற்கு பதிலாக 2540 பேரை தேர்வு செய்ய டி.என்.பி.எஸ்.சி. முடிவு செய்துள்ளது. இதற்கான அறிவிப்பு இன்று இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

துணை வணிக வரி அலுவலர், இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர், நன்னடத்தை அலுவலர், சார் பதிவாளர், சிறப்பு உதவியாளர், தனிப்பிரிவு உதவியாளர், உதவி பிரிவு அலுவலர், வனவர், முழு நேர விடுதி காப்பாளர், முதுநிலை ஆய்வாளர், தணிக்கை ஆய்வாளர், கைத்தறி ஆய்வாளர், இளநிலை கண்காணிப்பாளர், பேரூராட்சி செயல் அலுவலர்கள், இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர், நேர்முக எழுத்தாளர் உள்ளிட்ட பல்வேறு பதவிகள் குரூப் 2 தேர்வுகள் மூலமாகவே நிரப்பப்படுவது குறிப்பிடத்தக்கது.

# நெல்லுக்கான பணத்தை கொடுப்பதில் தாமதம்: அரிசி ஆலை உரிமையாளரை காருடன் கடத்திய 4 பேர் கைது

நெல்லை, நவ.11

தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் அருகே உள்ள குருசாமிபுரத்தை சேர்ந்தவர் அன்பழகன். இவரது மகன் உதயகுமார்(வயது 32). தொழிலதிபர். இவர் கடையம் அருகே உள்ள வெங்கடாம்பட்டியில் அரிசி ஆலை நடத்தி வருகிறார்.

இவர் கடலூர் மாவட்டத்தை சேர்ந்த சிலரிடம் நெல் கொள்முதல் செய்துள்ளார். சுமார் ரூ.98 லட்சத்திற்கு நெல் கொள்முதல் செய்த அவர், வாங்கிய நெல் மூட்டைகளை அரிசியாக்கி விற்றுள்ளார். அதில் ரூ.70 லட்சம் வரையிலான நெல்லுக்கான தொகையை திருப்பி ஒப்படைத்து விட்டதாக கூறப்படுகிறது.

மீதி தொகையை நெல் கொடுத்தவர்களிடம் ஒப்படைக்க தாமதித்து வந்துள்ளார். நெல் மூட்டைகள் அரிசியாக மாற்றி வைக்கப்பட்டுள்ள நிலையில் அவை விற்கப்பட்ட உடனே தொகைகளை ஒப்படைப்பதாக உதயகுமார் தெரிவித்துள்ளார்.

ஆனால் கால தாமதம் ஏற்படவே, நேற்று கடலூரில் இருந்து நெல் கொடுத்தவர்களான அரிகிருஷ்ணன், சூரியகுமார், சுரேஷ், புதுக்கோட்டையை சேர்ந்த பிரதீபன் ஆகிய 4 பேரும் வெங்கடாம்பட்டியில் இருக்கும் உதயகுமாரின் ரைஸ்மில்லுக்கு வந்துள்ளனர்.

அங்கு உதயகுமாரிடம் பணத்தை கேட்டுள்ளனர். அப்போது அவர்களுக்குள் வாக்குவாதம் முற்றியதில், ஆத்திரம் அடைந்த கும்பல், உதயகுமாரை அவரது காரில் ஏற்றியது.

பின்னர் அங்கிருந்து கடலூர் நோக்கி கடத்தி சென்றது. இந்த தகவலை அறிந்த அன்பழகன், உடனடியாக கடையம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

இதுதொடர்பாக இன்ஸ்பெக்டர் மேரி ஜெமிதா கடத்தல் வழக்குப்பதிவு செய்து 4 பேர் கும்பலை தேடினார்.

உதயகுமாரின் செல்போன் சிக்னலை வைத்து போலீசார் விசாரணை நடத்தியதில், சிக்னல் பெரம்பலூர் பகுதியை காண்பித்தது. உடனடியாக தனிப்படை போலீசார் அங்கு விரைந்து சென்றனர். அப்போது அங்குள்ள ஒரு விடுதி பகுதியில் உதயகுமாரின் கார் நின்றது. அதில் அவரை அந்த கும்பல் கடத்தி வைத்திருந்தது.

இதையடுத்து உதயகுமாரை மீட்ட போலீசார், அவரை கடத்தியதாக கடலூரை சேர்ந்த அரிகிருஷ்ணன், சூரியகுமார், சுரேஷ், புதுக்கோட்டையை சேர்ந்த பிரதீபன் ஆகிய 4 பேரை கைது செய்தனர். பின்னர் கடையத்திற்கு அழைத்து வரப்பட்ட 4 பேரும் கோர்ட்டில் ஆஜர் படுத்தி பாளை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

பணம் கொடுப்பதில் ஏற்பட்ட தாமதத்திற்காக தொழிலதிபரை காரில் கும்பல் கடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மாணவர்களின் கல்வி தரம் உயர்ந்துள்ளது அமைச்சர்

அரக்கோணம், நவ.11

ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் அடுத்த பெருமூச்சி கிராமத்தில் அரசு நடுநிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது.

இந்த பள்ளியில் இன்று காலை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திடீரென ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது மாணவர்களை புத்தகம் வாசிக்க வைத்து கற்றல் திறனை கண்டறிந்தார்.

பின்னர் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியதாவது:

தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளையும் ஆய்வு செய்து வருகிறோம்.



பெருமூச்சி அரசு நடுநிலைப் பள்ளிக்கு ஆய்வு மேற்கொண்டபோது மாணவர்கள் திறமையுடன் பதில் அளித்தனர். இதனை கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். மாணவர்களின் கல்வி தரம் உயர்ந்துள்ளது.

கல்வித்துறைக்கு சட்டசபை வரலாற்றிலேயே அதிக நிதியை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒதுக்கியுள்ளார்.

வருகிற 2026ம் ஆண்டுக்குள் பழுதடைந்த பள்ளி கட்டிடங்கள் சரி செய்யப்படும்.

ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். ஒரு பள்ளிக்கு தலைமை ஆசிரியர் மிக முக்கியம். அவர் கப்பலின் கேப்டனை போல. ஆசிரியர்கள் அவருடன் இருந்து சிறப்பாக பணியாற்றுவதால் அந்த பள்ளி சிறப்பாக செயல்படுகிறது.

கொள்கையை விட்டுக் கொடுத்து மத்திய அரசிடம் பணம் பெற அவசியம் இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

இதற்கு முன்னதாக அந்தப் பள்ளியில் மாணவர்களுக்கு வழங்கப்படும் காலை உணவு திட்டம், சமையல் கூடத்தையும் பார்வையிட்டார்.

# தி.மு.க. கூட்டணி வலிமையாக, உறுதியாக உள்ளது: யாரும் உடைக்க முடியாது ப.சிதம்பரம்



சென்னை, நவ.10

காங்கிரஸ் கட்சியில் மூத்த தலைவர்களில் ஒருவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான ப. சிதம்பரம் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி புதுவயலில் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான கூட்டணி வலிமையாக, உறுதியாக உள்ளது. அதனை யாரும் உடைக்க முடியாது. கலைக்க முடியாது.

அடுத்த தேர்தலிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான கூட்டணி வெற்றிபெறும். அதில் சந்தேகம் வேண்டாம்.

ஒரே நாடு, ஒரே தேர்தல் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றால் அரசியல் சாசனத்தை திருத்த வேண்டும்.

அரசியல் சாசனத்தை திருத்தாமல் அதைப் போன்று ஒரு சட்டம் நிறைவேற்ற முடியாது. இதனை திருத்த ஒவ்வொரு அவையிலும் அதாவது மக்களவை, மாநிலங்களவையிலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருக்க வேண்டும்.

பா.ஜ.க.விற்கு மக்களவையிலும் பெரும்பான்மை இல்லை. மாநிலங்களவையிலும் பெரும்பான்மை இல்லை. அரசியல் சாசனத்தை திருத்தும் சட்ட மசோதவை கொண்டுவந்தால் அதை நிச்சயம் நாங்கள் தோற்கடிப்போம். ஒரே நாடு ஒரே தேர்தல் நடைபெறாது.

இவ்வாறு ப.சிதம்பரம் கூறினார்.

# தமிழ்நாட்டின் தலைமை தேர்தல் அதிகாரியாக அர்ச்சனா பட்நாயக் நியமனம்



சென்னை, நவ.11

தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரியாக அர்ச்சனா பட்நாயக் நியமனமிக்கப்பட்டுள்ளார். இவர் தமிழ்நாட்டின் முதல் பெண் தலைமை தேர்தல் அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது.

அர்ச்சனா பட்நாயக் தற்போது தமிழ்நாடு அரசின் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்க துறையின் செயலாளராக உள்ளார். தற்போது தலைமை தேர்தல் அதிகாரியாக உள்ள சத்ய பிரதா சாகு, கால்நடை பராமரிப்புத் துறை முதன்மைச் செயலாளராக சில நாட்களுக்கு முன்பு பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

இந்த நிலையில், தமிழ்நாட்டின் அடுத்த தலைமை தேர்தல் அதிகாரியாக அர்ச்சனா பட்நாயக் நியமிக்கப்பட்டு இருக்கிறார்.

# தஞ்சை பெரிய கோவிலில் மங்கள இசையுடன் தொடங்கிய மாமன்னன் ராஜராஜசோழன் 1039வது சதய விழா





தஞ்சாவூர், நவ.10

தஞ்சை பெரிய கோவிலை கட்டி மாமன்னன் ராஜராஜ சோழன் உலகிற்கே பெருமை சேர்த்தார்.

இந்த கோவில் உலக பாரம்பரிய சின்னமாக திகழ்கிறது. மாமன்னன் ராஜராஜசோழன் ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தன்று பிறந்ததால் ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாதத்தில் வரும் சதய நட்சத்திரத்தன்று சதய விழா 2 நாட்கள் வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி 1039வது சதயவிழா அரசு விழாவாக இன்று காலை இறைவணக்கம், மங்கள இசையுடன் தொடங்கியது. தொடர்ந்து களிமேடு அப்பர் பேரவை திருமுறை அரங்கம் நடைபெற்றது.

இதையடுத்து தொடக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது. சதயவிழாக்குழு தலைவர் செல்வம் வரவேற்றார்.

விழாவிற்கு தலைமை தாங்கி கலெக்டர் பிரியங்கா பங்கஜம் சிறப்புரையாற்றினார். பின்னர் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சுரேஷ்குமார் தொடக்க உரையாற்றினார்.

நிகழ்ச்சிக்கு அரண்மனை பரம்பரை தேவஸ்தானம் அறங்காவலர் பாபாஜி ராஜா போன்ஸ்லே, மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஆஷிஷ்ராவத், தென்னக பண்பாட்டு மைய இயக்குனர் கோபாலகிருஷ்ணன், முன்னாள் எம்.எல்.ஏ. ராமசந்திரன், முன்னாள் நகர்மன்ற தலைவர் இறைவன், பேராசிரியர் சிவசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பழநி ஆதீனம் குருமகா சந்நிதானம் சாது சண்முக அடிகளார் அருளுரை வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து வரலாறாக வாழும் மாமன்னன் ராசராசன் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

இதையடுத்து பிற்பகலில் நாதசுரம், பரத நாட்டியம், யாழ் இசை, வில்லுப்பாட்டு ஆகியவை அடுத்தடுத்து நடைபெற்றன. இரவு வரை பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

விழாவின் 2ம் நாளான நாளை (ஞாயிற்றுகிழமை) காலை 6.30 மணிக்கு மங்கள இசையுடன் நிகழ்ச்சி தொடங்குகிறது. காலை 7 மணிக்கு கோவில் பணியாளர்களுக்கு கயிலை மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகளை புத்தாடைகள் வழங்குகிறார். காலை 7.20 மணிக்கு அரசு சார்பில் மாமன்னன் ராஜராஜசோழன்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

காலை 8 மணிக்கு 100க்கும் மேற்பட்ட ஓதுவாமூர்த்திகள் திருமுறை பண்ணுடன் ராஜவீதிகளில் திருஉலா நடைபெறும். காலை 9.10 மணிக்கு பெருவுடையார், பெரியநாயகி அம்மனுக்கு பேரபிஷேகம் நடக்கிறது. மதியம் 1.30 மணியளவில் பெருவுடையார், பெரியநாயகி அம்மனுக்கு பெருந்தீப வழிபாடு நடைபெறும்.

தொடர்ந்து 1039 கலைஞர்கள் பங்குபெறும் மாபெரும் நாட்டிய நிகழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

சதய விழாவையொட்டி தஞ்சை பெரிய கோவில் முழுவதும் வண்ண மின் விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. மேலும் பெரிய கோவில் முன்பும் அலங்கார தோரண வாயில்களும் அமைக்கப்பட்டுள்ளன. பெரியகோவில் அருகே உள்ள பாலம், சோழன் சிலை பூங்கா உள்ளிட்ட இடங்களிலும் மின்விளக்கு அலங்காரம் செய்யப்பட்டு தஞ்சை நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது.

# ஆரல்வாய்மொழி அருகே நடந்த வக்கீல் கொலையில் மேலும் 4 பேர் சிக்கினர்

ஆரல்வாய்மொழி, நவ.10

நாகர்கோவில் அருகே திருப்பதிசாரம் கீழூரை சேர்ந்தவர் பொன்னையா. இவரது மகன் இசக்கிமுத்து (வயது 32). தற்போது திருப்பதிசாரம் அரசு விதைப்பண்ணை அருகே குடும்பத்துடன் வசித்து வருகிறார். இவரது மனைவி ஐஸ்வர்யா. இவர்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். இசக்கிமுத்து மரக்கடையில் வேலை பார்த்து வருகிறார். இசக்கி முத்துவின் தந்தைக்கும், அவரது சகோதரர்களுக்கும் இடையே சொத்து பிரச்சனை இருந்து வருகிறது.

இது தொடர்பான வழக்கு நாகர்கோவில் கோர்ட்டில் நடந்து வருகிறது. இந்த வழக்கை தக்கலையை சேர்ந்த வக்கீல் கிறிஸ்டோபர் சோபி என்பவர் பொன்னையாவுக்கு ஆதரவாக நடத்தி வருகிறார். இந்த வக்கீலை இசக்கிமுத்து ஏற்பாடு செய்திருந்தார். வழக்கு பல ஆண்டுகளாக நடந்து வரும் நிலையில் வழக்கு முடிவுக்கு வரவில்லை. இதனால் வக்கீல் கிறிஸ்டோபர் சோபிக்கும், இசக்கி முத்துவுக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது. வழக்கை விரைந்து முடிக்குமாறு கிறிஸ்டோபர் சோபிடம் இசக்கிமுத்து கூறி வந்தார். இந்த நிலையில் கிறிஸ்டோபர் சோபி திருப்பதிசாரம் பகுதிக்கு வந்துள்ளார். அங்கு வைத்து இசக்கிமுத்து அவரை அரிவாளால் வெட்டி கொலை செய்தார். பின்னர் உடலை பீமநகரி சந்தியான் குளக்கரையில் தீ வைத்து எரித்தார். பின்னர் இசக்கிமுத்து ஆரல்வாய்மொழி போலீசில் சரணடைந்தார். போலீசார் அவரிடம் விசாரணை மேற்கொண்டனர். பின்னர் குளத்தங்கரைக்கு சென்று பார்த்தபோது கிறிஸ்டோபர் சோபி எரித்து கொலை செய்யப்பட்ட நிலையில் பிணமாக கிடந்தார்.

பிணத்தை கைப்பற்றி போலீசார் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இது தொடர்ந்து இசக்கி முத்துவிடம் போலீசார் விசாரணை மேற்கொண்டபோது பல திடுக்கிடும் தகவல்கள் வெளியானது. கொலை செய்யப்பட்ட இசக்கி முத்து போலீசாரிடம் கூறியதாவது: எனது தந்தையின் குடும்ப சொத்து பிரச்சினை தொடர்பான வழக்கு பல ஆண்டுகளாக கோர்ட்டில் நடந்து வருகிறது. இந்த வழக்கு செலவுக்கு கிறிஸ்டோபர் சோபி லட்சக்கணக்கில் பணம் வாங்கினார். இந்த சொத்து பத்திரத்தையும் வக்கீல் தான் வைத்திருந்தார். கிறிஸ்டோபர் சோபி தங்களுக்கு எதிராக செயல்பட்டதால் எனக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதனால் சொத்து பத்திரத்தை திருப்பி தரும்படி கேட்டேன். ஆனால் அவர் கொடுக்க மறுத்தார். இதனால் எங்களுக்குஇடையே பிரச்சனை ஏற்பட்டது. எனது மனைவியையும் தகாத வார்த்தைகளால் பேசி வந்தார். இந்த நிலையில் வக்கீல் கிறிஸ்டோபர் சோபி என்னைதொடர்பு கொண்டு தனக்கு வாழைக்கன்று வேண்டும் என்று கேட்டார். இதையடுத்து அவரை எங்களது ஊருக்கு வரவழைத்து அவரை தீர்த்துக்கட்ட திட்டம் தீட்டினேன். அவரும் மோட்டார் சைக்கிளில் எங்கள் ஊருக்கு வந்தார். அங்கு வைத்து அவரை அரிவாளால் வெட்டி கொலை செய்தேன். பின்னர் எனது நண்பர்கள் உதவியுடன் மோட்டார் சைக்கிளில் அவரை சந்தியான் குளக்கரையில் வீசியதுடன் தீ வைத்து எரித்ததாக கூறினார். தனிப்படை போலீசார் தொடர்ந்து அவரிடம் விசாரணை மேற்கொண்டனர். இந்த கொலை வழக்கில் அவரது நண்பர்களுக்கு தொடர்பு இருப்பது தெரிய வந்தது. இதையடுத்து அவர்களை கைது செய்ய போலீசார் நடவடிக்கை மேற்கொண்டனர். இந்த நிலையில் நேற்று இரவு தனிப்படை போலீசார் இசக்கிமுத்து நண்பர்கள் 4 பேரை பிடித்துள்ளனர். பிடிபட்ட 4 பேரையும் ரகசிய இடத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள். விசாரணையில் வக்கீலை கொலை செய்து விட்டு 2 மோட்டார் சைக்கிள்களில் அவரது உடலை குளத்தின் கரையில் வீசி சென்றவுடன் அடையாளம் தெரியாமல் இருப்பதற்காக பெட்ரோல் ஊற்றி தீ வைத்ததாகவும் கூறினார்கள். தொடர்ந்து 4 பேரிடமும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. போலீசார் அவர்களையும் கோர்ட்டில் ஆஜர்படுத்தி ஜெயலில் அடைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

# 18 வயது பூர்த்தி அடைந்தவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க உதவுங்கள் நிர்வாகிகளுக்கு விஜய் அறிவுறுத்தல்



சென்னை, நவ.10

புதிய வாக்காளர்களை சேர்த்தல், வாக்காளர்களின் முகவரி மாற்றம், பெயர்திருத்தம் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் பொது மக்களின் தேவையறிந்து தமிழக வெற்றிக்கழகத்தினர் செயல்பட உரிய அறிவுறுத்தல்களை கட்சி தலைமை வழங்கி இருக்கிறது.

இதுதொடர்பாக மாநில, மாவட்ட நிர்வாகிகளுக்கு தொலைபேசி வாயிலாக விஜய் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். அதில் அவர், 2026ம் ஆண்டு நடக்கும் சட்டசபை தேர்தல்தான் நாம் சந்திக்கும் முதல் தேர்தல். எனவே இந்த முதல் தேர்தலையே சவாலாக எடுத்துக் கொண்டு, நாம் தீர்மானித்த இடத்திற்கு வர இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். வாக்காளர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளை நீக்குங்கள். அவர்களுக்கு பெயர் திருத்தம், முகவரி மாற்றம் எதுவென்றாலும் முன்நின்று உதவுங்கள் என்று கூறியிருக்கிறார்.

மேலும், 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாதவர்கள், புதிதாக குடி வந்துள்ளவர்கள் என அனைத்து தரப்பினரின் பெயர்களை பட்டியலில் சேர்க்க வேண்டும். ஒரு நபரின் பெயர், ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் இருப்பின், அதை அடையாளம் கண்டு நீக்க வலியுறுத்துங்கள்.

நீங்கள் இருக்கும் பூத் பகுதியை விட்டு இடம் பெயர்ந்தவர்கள், இறந்தவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்க பரிந்துரையுங்கள். இதற்கு உரிய படிவத்தை பெற்று பூர்த்திசெய்து, தொடர்புடைய முகாம்களில் வழங்குங்கள். இந்த பணிகளை செய்ய இப்போதே தயாராகி கொள்ளுங்கள் என்று வலியுறுத்தி இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

இதற்கிடையே, பூத் கமிட்டி, வாக்காளர் சேர்த்தல், திருத்த முகாம் தொடர்பாக நிர்வாகிகளிடம் மாவட்டம் வாரியாக தமிழக வெற்றிக்கழக பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் ஆலோசனை நடத்த இருக்கிறார்.

# விபத்துக்குள்ளாகி தீப்பற்றி எரிந்த பஸ் ஒருவர் பலி



சேலம், நவ.10

சேலம் மாவட்டம் சங்ககிரி அருகே நெடுஞ்சாலையில் சென்ற பஸ் நிலை தடுமாறி கவிழ்ந்து தீப்பற்றி எரிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

தனியார் பஸ் மீது மோதிய விபத்தில் இருசக்கர வாகனத்தில் வந்தவர் உயிரிழந்தார்.

சென்னையில் இருந்து 30க்கும் மேற்பட்ட பயணிகளுடன் கோவை நோக்கி சென்ற ஆம்னி பஸ், சங்ககிரி கோவை தேசிய நெடுஞ்சாலையில் நிலை தடுமாறி கவிழ்ந்தது. பஸ் கவிழ்ந்த சில நொடிகளில் தீப்பற்றி எரிந்தது.

பஸ்சில் இருந்து பயணிகள் உடனடியாக வெளியேறியதால் பெரும் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது.

# ஆட்சி மாற்றம் கைகூடி வரும் விஜயபாஸ்கர்



சென்னை, நவ.10

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் கூறியிருப்பதாவது:

ஒரு மாதத்தில் கூட மாற்றம் ஏற்பட்டு ஆட்சி மாற்றம் கைகூடி வரும். மாற்றம் கைகூடுவதற்கு தெலுங்கானா, ஆந்திராவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமே உதாரணம்.

அ.தி.மு.க. நேற்றைய மழையில் முளைத்த காளான் அல்ல... எம்.ஜி.ஆர். விதைத்து ஜெயலலிதா வளர்த்த விருட்சம் என்று கூறியுள்ளார்.

தமிழக வெற்றிக் கழக மாநாட்டில் விஜய், அ.தி.மு.க. குறித்து விமர்சிக்காதததால் அதனுடன் கூட்டணி அமைக்க வாய்ப்புள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவித்து வரும் நிலையில், விஜயபாஸ்கர் ஆட்சி மாற்றம் கைகூடி வரும் என்று கூறியிருப்பது தமிழக அரசியல் களத்தை உற்று நோக்க வைத்துள்ளது.

# 3 லாரிகள் ஒன்றன் பின் ஒன்று மோதி விபத்து டிரைவர் உயிரிழப்பு



சென்னை, நவ.10

சென்னை அருகே கும்மிடிப்பூண்டியில் 3 லாரிகள் ஒன்றன் பின் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் லாரி டிரைவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மற்றொரு லாரி டிரைவர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

உயிரிழந்த டிரைவர் பூந்தமல்லி நசரத்பட்டியை சேர்ந்த நாகராஜ் என்பது தெரிய வந்துள்ளது.

விபத்து குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த அப்பகுதியில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அரசு கல்லூரி ஆசிரியர்கள் பணியிட மாறுதலுக்கான பொது கலந்தாய்வு இணைய வழியில் நடைபெறும் தமிழக அரசு



சென்னை, நவ.10

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு அரசு கல்லூரிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்வித் துறையின் கீழ் இயங்கி வரும் அரசு பொறியியல் கல்லூரிகள், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகள், அரசினர் சிறப்புப் பயிலகங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்களிடம் இருந்து பணியிட மாறுதலுக்கான பொது கலந்தாய்வு நடைபெற வேண்டுமென அரசுக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.


ஆசிரியர்களின் இந்தக் கோரிக்கைகளைப் பரிவுடன் ஏற்று. நடப்பு ஆண்டில் மேற்கண்ட துறைகளின் கீழ் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பணியிட மாறுதலுக்கான பொது கலந்தாய்வை வெளிப்படைத் தன்மையுடன் இணைய வழியின் வாயிலாக மேற்கொள்ளலாம் என அரசு முடிவு செய்துள்ளது.

அதன்படி 202425 ஆம் கல்வி ஆண்டிற்கான பணியிட மாறுதலுக்கான பொது கலந்தாய்வினை உரிய நெறிமுறைகளைப் பின்பற்றி 25.11.2024க்குள் வெளிப்படைத் தன்மையுடன் இணைய வழியின் வாயிலாக மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுரை வழங்கியுள்ளதாக உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க இணைய வழியாகப் பெறப்படுகின்ற ஆசிரியர்களின் மாறுதல் விண்ணப்பங்கள் உரிய விதிகளின்படி பரிசீலனை செய்யப்பட்டு ஆணைகள் வழங்கப்படும்.

# மேட்டூர் அணையை தூர்வார முடியாது அமைச்சர் துரைமுருகன்





வேலூர், நவ.10

வேலூரை அடுத்த அணைக்கட்டு ஊராட்சியில் புதிதாக தொடங்கப்பட்ட துணை போலீஸ் சூப்பிரண்டு அலுவலக திறப்பு விழா நேற்று நடந்தது. நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அலுவலகத்தை திறந்து வைத்தார்.

பின்னர் அமைச்சர் துரைமுருகன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:


காவிரி ஆற்றின் குறுக்கே ஆதனூர் குமாரமங்கலம் தடுப்பணை, புகளூர் கதவணை திட்டத்தை கிடப்பில் போட்டது குறித்து கொஞ்சம் கூட ஆதாரமில்லாமல் எடப்பாடி பழனிசாமி பேசியுள்ளார். இந்த திட்டம் அவரால் தொடங்கப்பட்டது. சரியாக ஆய்வு செய்யாமல் இடத்தை தேர்வு செய்துவிட்டார்.

இந்த திட்டத்தை செயல்படுத்த மறுஆய்வு செய்யவே பாதி பணம் போய் விட்டது. இதனை அவர் சட்டமன்றத்தில் பேசட்டும் சரியான பதில் அளிக்கிறேன்.

நீர் நிலைகளை தனியாரிடம் ஒப்படைக்கும் திட்டம் எதுவும் இல்லை. மேட்டூர் அணையை தூர்வார முடியாது. யாரும் அங்கு மணல் எடுக்கமாட்டார்கள். தாமிரபரணி ஆற்றைநாளைஐகோர்ட்டு நீதிபதிகள் ஆய்வு செய்வது குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

# மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு குறைப்பு



சேலம், நவ.10

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையை பொறுத்து மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தும், குறைந்தும் வந்து கொண்டு இருக்கிறது.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களாக நீர்வரத்தை விட அதிகளவில் தண்ணீர் காவிரி டெல்டா பாசனம் மற்றும் கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு திறக்கப்பட்டு வருவதால் மேட்டூர் அணையின் நீர் மட்டம் குறைந்து காணப்பட்டது.

இதற்கிடையே கடந்த மாதம் 3வது வாரத்தில் பெய்த மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்பட்டது. இதன் காரணமாக 96 அடியாக குறைந்த அணையின் நீர் மட்டம் மீண்டும் 107 அடியாக உயர்ந்தது.

இந்த நிலையில் தற்போது மழை குறைந்து விட்டது. ஆனாலும் டெல்டா பாசனத்துக்கு தொடர்ந்து தண்ணீர் திறக்கப்பட்டு வருவதால் நீர் மட்டமும் குறைந்து வருகிறது.

மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசன தேவைக்கு ஏற்ப அங்கு மழை பெய்தால் தண்ணீர் குறைத்தும், மழை நின்றால் அதிகரித்தும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. தற்போது டெல்டா மாவட்டங்களில் மழை பெய்து வருவதால் தண்ணீர் தேவை குறைந்து உள்ளது. இதன் காரணமாக மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கு திறக்கப்படும் தண்ணீர் வினாடிக்கு 8 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டது.

நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 106.59 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு நேற்று 9 ஆயிரத்து 466 கனஅடியாக இருந்த நீர்வரத்து இன்று 9 ஆயிரத்து 149 கனஅடியாக குறைந்தது. கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு 600 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. தற்போது அணையில் 73.64 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.

# கொடைக்கானலில் இபாஸ் சோதனை தீவிரம்

கொடைக்கானல், நவ.10

கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள்வாகனங்களில்இபாஸ் சோதனைதீவிரமாக நடைபெறுகிறது.

கொடைக்கானலுக்கு இபாஸ் பெற்ற வாகனங்களை மட்டுமே அனுமதிக்க வேண்டும் என ஐகோர்ட் உத்தரவிட்ட நிலையில் சோதனை தீவிரமாக நடைபெற்று வருகிறது.

கொடைக்கானல் நுழைவாயில் பகுதியில் உள்ள சோதனை சாவடியில் சுமார் 5 கி.மீ. தூரத்திற்கு நீண்ட வரிசையில் வாகனங்கள் நிற்கிறது. நகர கூட முடியாமல் நீண்ட நேரமாக சுற்றுலா பயணிகள் காத்திருக்கின்றனர்.

விடுமுறை என்பதால் வழக்கத்திற்கு மாறாக சுற்றுலா பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது.

# தருமபுரி மாவட்ட மனிதநேய மக்கள் கட்சி நிர்வாகிகள் எச்.ராஜா மீது போலீசில் புகார்

தருமபுரி, நவ.10

அவதூறு கருத்துக்களை பரப்பும் பா.ஜ.க.வை சேர்ந்த எச்.ராஜா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனித நேய மக்கள் கட்சியின் தருமபுரி மாவட்ட தலைவர் சுபேதார் தலைமையில் கட்சியினர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மகேஸ்வரனிடம் மனு கொடுத்தனர்.

பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு ஒருங்கிணைப்பாளரின் தலைவராக இருந்து வரும் எச்.ராஜா என்பவர் நேற்று முன்தினம் சென்னை விமான நிலையத்தில் நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் பாபநாசம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரும், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவருமான பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லாஹ் குறித்தும், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் ஆகியோர் குறித்து அவதூறு கருத்துகளை தெரிவித்துள்ளார். மேலும், அவர் பொய்யான செய்திகளை பரப்பி, மதக்கலவரத்தை ஏற்படுத்தும் நோக்கில் பேசியுள்ளார்.



மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ. ஜவாஹிருல்லாஹ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் திருமாவளவன் மீது தேவையற்ற அவதூறு பரப்ப செய்து, மக்களுக்கு இடையில் மோசமான தாக்கங்களை ஏற்படுத்தும் வகையில் எச்.ராஜா செயல்படுகிறார் எனும் குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்கு பதிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

மனு கொடுக்கும் போது மனிதநேய மக்கள் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் ஷாஜகான், இளைஞர் அணி மாவட்ட செயலாளர் ஜீலான், நகர தலைவர் சாதிக், நகர துணை செயலாளர் ஏஜாஸ், முன்னாள் மாவட்ட நிர்வாகி நவுஷாத் ஆகியோர் உடனிருந்தனர்.

# அரசுக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு உதவி மையம்: அமைச்சர் கோவி.செழியன் அறிவிப்பு



சென்னை, நவ.10

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவுரையின் படி உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவியர், பெற்றோர், பொதுமக்கள் ஆகியோருக்குத் தேவைப் படும் தகவல்களை வழங்கும் உதவி மையம் அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் அமைக்கப்படும் என உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் அறிவித்துள்ளார். அதன் விவரம் வருமாறு:

தமிழ்நாட்டில் உயர்கல்வித் துறையின்கீழ் 13 பல்கலைக் கழகங்கள், 164 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 7 கல்வியியல் கல்லூரிகள், 10 பொறியியல் கல்லூரிகள். 52 தொழில் நுட்பக் கல்லூரிகள், சிறப்பு நிறுவனங்கள், 162அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

இக்கல்வி நிறுவனங்களில் மாணவ, மாணவியருக்கு வெளிப்படையான, பதிலளிக்கக்கூடிய மற்றும் அணுகுவதற்கு எளிமையான ஒரு சூழலை ஏற்படுத்தும் விதமாக, அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் மாணவர்சேர்க்கைக்காகவும் மற்றும் இதர காரணங்களுக்காகவும் மேற்குறிப்பிட்டுள்ள கல்வி நிறுவனங்களுக்கு வருகை தரும் மாணவியர், பெற்றோர் மற்றும் பொதுமக்கள் அந்நிறுவனங்களில் வழங்கப்படும்.

பட்டப்படிப்புகள், பட்ட மேற்படிப்புகள், ஆராய்ச்சிப் படிப்புகள், மாணவர் சேர்க்கை பற்றிய விவரங்கள், துறை அலுவலகங்களின் அமைவிடம், தனியார்களின் கோரிக்கை தொடர்பாக எந்த அலுவலரை அணுகுவது.

அலுவலக நடைமுறைகள், தனியார்களின் கோரிக்கைகள் தொடர்பான முன்னேற்றம் போன்ற விவரங்களை ஒரே இடத்தில் தெரிந்து கொள்ள ஏதுவாக மேற்குறிப்பிட்டுள்ள உயர்கல்வித்துறையின்கீழ் இயங்கும் அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் அக்கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்து விவரங்களையும் நன்கு அறிந்த, அனுபவம் வாய்ந்த பணியாளர்களைக் கொண்ட ஓர் உதவி மையம்" கல்லூரியின் முதன்மையான இடத்தில் ஏற்படுத்தப்படும்.

இந்த மையம் பயனாளிகளுக்கு எளிதில் உதவும் வகையில் அமைக்கப்படும். இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் கூறி உள்ளார்.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 9 ஆயிரம் கனஅடியாக குறைந்தது



ஒகேனக்கல், நவ.10

கர்நாடகம் மற்றும் தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள கே.ஆர்.எஸ்., கபினி ஆகிய அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் அணைகளில் இருந்து உபரி நீர் தமிழக காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டது.

இதனால் நேற்று ஒகேனக்கல்லுக்கு வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்தது.

இந்த நிலையில் நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழை குறைந்தது. இதனால் நீர்வரத்து படிப்படியாக குறைய தொடங்கியது.

இன்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து வினாடிக்கு 9 ஆயிரம் கன அடியாக குறைந்து வந்தது.

மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. மேலும் காவிரி ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

சுற்றுலா பயணிகள் குடும்பத்துடன் பரிசல் பயணம் மேற்கொண்டு காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர்.

பின்னர் அவர்கள் தொங்கு பாலத்தில் நின்றவாறு காவிரி ஆற்றை கண்டு ரசித்து பார்த்தனர். மெயின் அருவியில் குளித்தும், பெண்கள் காவிரி ஆற்றில் குளித்தும் மகிழ்ந்தனர்.

காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழககர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர் வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# 'இட்லி கடை' படத்தின் அப்டேட்: ரிலீஸ் தேதியை அறிவித்த தனுஷ்




நடிகர் தனுஷ் இயக்கி நடித்த 'பவர் பாண்டி', 'ராயன்' போன்ற படங்கள் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தன. இப்படங்களையடுத்து, தனுஷ் இயக்கி இருக்கும் படம் 'நிலவுக்கு என் மேல் என்னடி கோபம்'. இப்படம் அடுத்த மாதம் கிறிஸ்துமஸ் தினத்தை முன்னிட்டு வெளியாகும் என்று சொல்லப்படுகிறது.

இதனைத்தொடர்ந்து, தனுஷ் இயக்கத்தில் 4 வது படமாக 'இட்லி கடை' என்கிற திரைப்படம் உருவாகி வருகிறது. இது தனுஷின் 52வது திரைப்படமாகும். ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கும் இந்த படத்தினை டான் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது.

மேலும், அருண்விஜய், ராஜ்கிரண் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இத்திரைப்படத்தில், திருச்சிற்றம்பலம் படத்திற்கு பிறகு தனுஷுக்கு ஜோடியாக நித்யா மேனன் நடிப்பதாக கூறப்படுகிறது. இந்நிலையில், இப்படத்தின் அடுத்த அப்டேட் ஒன்று வெளியாகி உள்ளது.

அதன்படி, இப்படத்தின் ரிலீஸ் தேதியை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, 'இட்லி கடை' படம் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 10ம் தேதி உலகம் முழுவதும் வெளியாகும் என்று தனுஷ் தனது எக்ஸ் பக்கத்தில் போஸ்டர் பகிர்ந்து தெரிவித்துள்ளார்.

# 'உண்மையில் நான்தான் சூர்யாவுடன் பணியாற்றும் வாய்ப்பை இழந்து விட்டேன்' ராஜமவுலி




தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர் சூர்யா. இவர் தற்போது இயக்குனர் சிவா இயக்கத்தில் நடித்துள்ள திரைப்படம் 'கங்குவா'. ஸ்டுடியோ கிரீன் மற்றும் யுவி கிரியேஷன் நிறுவனம் இணைந்து தயாரித்துள்ள இந்த படத்தில் திஷா பதானி, பாபி தியோல், யோகி பாபு, ரெடின் கிங்ஸ்லி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்துக்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார்.

வெற்றி ஒளிப்பதிவு செய்யும் இப்படம் 3டி முறையில் சரித்திர படமாக உருவாகியுள்ளது. சமீபத்தில் இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி வைரலாகியது. இத்திரைப்படம் வருகிற 14ந் தேதி உலகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இதற்கிடையில் படக்குழுவினர் மும்பை, புதுடெல்லி, கொச்சி போன்ற இடங்களில் படத்தின் புரமோஷன் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் கடந்த 2 தினங்களுக்கு முன்பு ஐதராபாத்தில் இப்படத்தின் புரமோசன் நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ராஜமவுலி வந்திருந்தார். அப்போது ராஜமவுலி பேசுகையில், 'சூர்யா பாகுபலி படத்தின் வாய்ப்பை இழந்து விட்டதாக கூறினார். உண்மையில், நான்தான் சூர்யாவுடன் பணியாற்றும் வாய்ப்பை இழந்து விட்டேன். காரணம் எனக்கு சூர்யாவை அவ்வளவு பிடிக்கும். குறிப்பாக அவருடைய நடிப்பு, திரையில் தோன்றும் விதம் அனைத்தும் பிடிக்கும். பாகுபலி படத்தில் நடிக்கவில்லை என்று நீங்கள் எடுத்த முடிவை நான் மிகவும் மதிக்கிறேன். ஏனென்றால் நீங்கள் இயக்குனர் யார் என்பதை மீறி, கதை எப்படி இருக்கிறது என்று பார்த்தீர்கள்' என்றார்

# 'மாடுகள் கடவுள் போன்றவை; தயவுசெய்து சாலையில் விடாதீர்கள்' நடிகை நிக்கி கல்ராணி வேண்டுகோள்

அப்சரா ரெட்டியின் அறக்கட்டளை சார்பாக வண்டலூர் உயிரியல் பூங்காவில் விலங்குகளின் பராமரிப்பிற்காக 3 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது. இதில் நடிகை நிக்கி கல்ராணி கலந்து கொண்டார். இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் கூறியதாவது; "நாம் வீடுகளில் செல்லப் பிராணிகளை வளர்ப்பது போல், உயிரியல் பூங்காக்களில் உள்ள விலங்குகளை தத்தெடுத்து, அவற்றின் பராமரிப்பு செலவுகளுக்கு நம்மால் முடிந்த தொகையை வழங்கலாம். எனக்கு சிறுவயதில் இருந்தே விலங்குகள் என்றால் மிகவும் பிடிக்கும். நாய்கள், பூனைகள் மட்டுமின்றி, அனைத்து விலங்குகள் மீதும் நாம் கருணையுடன் நடந்து கொள்ள வேண்டும். மாடுகளை வளர்ப்பவர்கள் அவற்றை சாலைகளில் விடுவதை பார்க்கும்போது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதுவும் ஒரு உயிர்தான். மாடுகளை நாங்கள் கடவுள் போல் பார்க்கிறோம். எனவே தயவுசெய்து அவற்றை சாலையில் விட வேண்டாம்." இவ்வாறு நிக்கி கல்ராணி தெரிவித்தார்.

# ரஞ்சி கோப்பை: ஸ்ரேயாஸ் ஐயர் அதிரடி இரட்டை சதம்.. மும்பை 602 ரன்கள் குவிப்பு




ரஞ்சி கோப்பை கிரிக்கெட் போட்டி பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் எலைட் பிரிவில் இடம் பெற்றுள்ள 32 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதுகின்றன. இதில் நடப்பு சாம்பியன் மும்பை ஒடிசா (ஏ பிரிவு) இடையிலான ஆட்டம் மும்பையில் நடைபெற்று வருகிறது.

இதில் முதலில் பேட்டிங் செய்த மும்பை அணி முதல் இன்னிங்சில் 123.5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 602 ரன்கள் குவித்து டிக்ளேர் செய்தது. மும்பை அணியில் அதிகபட்சமாக அதிராடியாக விளையாடிய ஸ்ரேயாஸ் ஐயர் 233 ரன்களும், சித்தேஷ் லாத் 169 ரன்களும் குவித்தனர்.

இதைத்தொடர்ந்து முதல் இன்னிங்சை தொடங்கிய ஒடிசா அணி 2வது நாள் ஆட்ட நேரம் முடிவில் 49 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கு 146 ரன்கள் எடுத்துள்ளது. சந்தீப் பட்நாயக் 73 ரன்களுடனும், தேபரதா பிரதான் 7 ரன்களுடனும் களத்தில் உள்ளனர். 3வது நாள் ஆட்டம் நடைபெற உள்ளது.

# கெய்க்வாட்டிற்கு ஏன் டி20 அணியில் இடம் கிடைக்கவில்லை..? கேப்டன் சூர்யகுமார் யாதவ் பதில்



தென்ஆப்பிரிக்காவுக்கு சென்றுள்ள சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 4 போட்டிகள் கொண்ட 20 ஓவர் தொடரில் ஆடுகிறது. இந்தியா தென்ஆப்பிரிக்கா இடையிலான முதலாவது 20 ஓவர் போட்டி டர்பனில் உள்ள கிங்ஸ்மீட் மைதானத்தில் நாளை (வெள்ளிக்கிழமை) இந்திய நேரப்படி இரவு 8.30 மணிக்கு நடக்கிறது.

இந்நிலையில் இந்த டி20 தொடருக்கு முன்னதாக பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்ட இந்திய அணியின் கேப்டன் சூர்யகுமார் யாதவிடம் ருதுராஜ் கெய்க்வாட்டிற்கு ஏன் டி20 அணியில் இடம் கிடைக்கவில்லை? என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த சூர்யகுமார் யாதவ் கூறுகையில், "ருதுராஜ் கெய்க்வாட் மூன்று வகையான கிரிக்கெட்டிலும் சிறப்பாகத்தான் செயல்படுகிறார். இருந்தாலும் அவருக்கு முன்னதாக அணியில் இடம் பிடித்த பலவீரர்கள் சிறப்பாக விளையாடி வருகின்றனர். எனவே வரிசையாக ஒவ்வொருவருக்கும் அணி நிர்வாகம் தேவைப்படும்போது வாய்ப்பு வழங்கி வருகிறது.

அந்த வகையில் ருதுராஜ் கெய்க்வாட்டிற்கும் இனிவரும் காலங்களில் வாய்ப்பு கிடைக்கும். எனவே அவர் சற்று பொறுமை காக்க வேண்டியது அவசியம். என்னை பொறுத்தவரை நிச்சயம் அவர் மூன்று வகையான அணிலும் இடம் பிடிக்கக்கூடிய தகுதியான வீரர்தான்" என்று கூறினார்.

# இந்தியா தென் ஆப்பிரிக்கா டி20 தொடர்: வெற்றி கோப்பை அறிமுகம்




சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாட உள்ளது. அதில் இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதலாவது டி20 போட்டி நாளை டர்பன் மைதானத்தில் நடைபெற உள்ளது. இதனையொட்டி இரு அணி வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் இந்த தொடரை கைப்பற்றும் அணிக்கு வழங்கப்படும் கோப்பை அறிமுக விழா இன்று நடைபெற்றது. இதில் தென் ஆப்பிரிக்க அணியின் கேப்டன் மார்க்ரமும், இந்திய அணியின் கேப்டன் சூர்யகுமார் யாதவும் ஒன்றாக கோப்பையுடன் புகைப்படம் எடுத்தனர்.

# ஐ.எஸ்.எல். கால்பந்து: கேரளாவை வீழ்த்தி ஐதராபாத் அணி வெற்றி



13 அணிகள் இடையிலான 11வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து தொடர் இந்தியாவில் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது.

இந்த தொடரில் கொச்சியில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் கேரளா பிளாஸ்டர்ஸ் எப்.சி. ஐதராபாத் எப்.சி. அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கேரளா பிளாஸ்டர்ஸ் சார்பில் ஜீசஸ் ஜிமெனெஸ் ஆட்டத்தின் 13வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். ஐதராபாத் அணி சார்பில் ஆண்ட்ரி ஆல்பா 43 மற்றும் 70வது நிமிடத்தில் என இரண்டு கோல்கள் அடித்தார். இந்த நிலையில் ஆட்டநேர முடிவில் ஐதராபாத் அணி 21 என்ற கோல் கணக்கில் கேரளா பிளாஸ்டர்ஸ் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.